**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடலாடி.**
**முன்னிலை: திரு. நா. வெங்கடேசன், D.C.,B.A.,M.L.,PGDCLCF.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**
**2023-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.135/2022**
**in**
**O.S. No.190/2019**

கூடுதல் ஆட்சியர், நிலம் கையகப்படுத்துதல் அலுவலர்,
இந்தியன் ஆயில் கார்பரேசன்,
திருச்சி. ... மனுதாரர்/1 பிரதிவாதி

**/எதிர்/**

1. மூர்த்தி .... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   இராமநாதபுரம்.
3. வட்டாட்சியர் அவர்கள்,
   கடலாடி. .... 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 16.08.2023 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1 பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.முரளிதரண் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.T.தினகரராஜன், திரு.S.ராஜேந்திரன், திரு.R.முருகவேல் ராஜன் ஆகியோர் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், எதிர்வாதங்களையும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1) மனுதாரர்/1 பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் கடந்த 20.11.2020ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி கட்டளை 9 பிரிவு 7 சிபிசி-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/1 பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

1ம் எதிர்மனுதாரர்/வாதி வழக்குச் சொத்தில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.22 14:27:42 +0530

சொத்து அரசாங்கப் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்தின் மீது வாதிக்கு உரிமை இல்லை என்றும், இராமநாதபுரம் – தூத்துக்குடியில் இருந்து தாவா சொத்தின் வழியாக பைப் லைன் வரைதல் வரைபடத்தின்படி குழாய் பதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பெட்ரோலிய இயற்கை எரிவாயு குழாய் சட்டத்தின்படி, குழாய் பதிப்பதைத் தடுக்கும் வகையில் எந்த ஒரு சிவில் வழக்கும் தாக்கல் செய்ய முடியாது என்றும், நிலத்தை கையகப்படுத்தப்பட்டு நிலத்தின் உரிமையாளர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கப்படுகிறது என்றும், பைப் லைன் போடப்படும் போது, நில உரிமையாளர்களுக்கு, கட்டடம், மரங்கள், மின்கம்பம் போன்றவற்றில் சில கட்டுப்பாடுகளைத் தவிர்த்து, அவர்களின் வழக்கமான விவசாய நடவடிக்கைகளுக்காக நிலம் மீட்கப்படும் என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 1வது பிரதிவாதியாக எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கு, சட்ட ரீதியாகவும் உண்மையாகவும் நீடிக்க முடியாது என்றும், கோவிட்–19 காரணமாக தூத்துக்குடி வரையிலான காலக்கெடுவுக்குள் பணிகளை முடிக்க வேண்டும் என்ற இலக்கின் காரணமாக இருந்ததால் இந்த 1ம் பிரதிவாதியால் வழக்கை தொடர முடியவில்லை என்றும், எனவே கடந்த 20.11.2020ம் தேதி இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது என்றும், எனவே அசல் வழக்கில் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 20.11.2020ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி கட்டளை 9 பிரிவு 7 சிபிசி–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவின் சுருக்கம்**:

எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவை மறுக்கப்படுகிறது என்றும், மேற்படி வழக்கில் காலதாமதமானது 594 நாட்கள் என்றும், மேற்படி காலதாதமத்திற்கு சரியான காரணங்கள் கூறவில்லை என்றும், கோவிட் தொற்று இருப்பதாகவும், பைப் லைன் பதிப்பதில் இருந்ததாலும், வழக்கினை தொடர முடியவில்லை என்றும், காலதாமதத்திற்கான ஏற்புடைய காரணங்கள் எதனையும் மனுவில் கூறவில்லை என்றும், வழக்கின் விசாரணையை தடுப்பதற்காக மனுதாரர்கள் மனுவை தாக்கல் செய்துள்ளதால் Exemplary cost உடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், Each and every day of delay should be explained என்ற விதிப்படி மனுதாக்கல்

N VENKATESAN
Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.22 14:27:55 +0530

செய்யப்படவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் மனுவில் தாவா சொத்து அரசாங்கப் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்தின் மீது வாதிக்கு உரிமை இல்லை என்றும், இராமநாதபுரம் – தூத்துக்குடியில் இருந்து தாவா சொத்தின் வழியாக பைப் லைன் வரைதல் வரைபடத்தின்படி குழாய் பதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பெட்ரோலிய இயற்கை எரிவாயு குழாய் சட்டத்தின்படி, குழாய் பதிப்பதைத் தடுக்கும் வகையில் எந்த ஒரு சிவில் வழக்கும் தாக்கல் செய்ய முடியாது என்றும், நிலத்தை கையகப்படுத்தப்பட்டு நிலத்தின் உரிமையாளர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கப்படுகிறது என்றும், கோவிட்–19 காரணமாக தூத்துக்குடி வரையிலான காலக்கெடுவுக்குள் பணிகளை முடிக்க வேண்டும் என்ற இலக்கின் காரணமாக இருந்ததால் இந்த 1ம் பிரதிவாதியால் வழக்கை தொடர முடியவில்லை எனவேகடந்த 20.11.2020 ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாக்கல் செய்து வாதம் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் காலதாமதமானது 594 நாட்கள் என்றும், மேற்படி காலதாதமத்திற்கு சரியான காரணங்கள் கூறவில்லை என்றும், கோவிட் தொற்று இருப்பதாகவும், பைப் லைன் பதிப்பதில் இருந்ததாலும், வழக்கினை தொடர முடியவில்லை என்றும், காலதாமதத்திற்கான ஏற்புடைய காரணங்கள் எதனையும் மனுவில் கூறவில்லை என்றும், வழக்கின் விசாரணையை தடுப்பதற்காக மனுதாரர்கள் மனுவை தாக்கல் செய்துள்ளதால் Exemplary cost உடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், Each and every day of delay should be explained என்ற விதிப்படி மனுதாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர் மனுதாக்கல் செய்து எதிர்வாதம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில்,

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.22 14:28:13 +0530

மேற்படி இருதரப்பில் சொல்லப்பட்ட வாதங்களையும், தாக்கல் செய்த ஆவணங்களையும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில், மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கோவிட்–19 காரணமாக இராமநாதபுரம் முதல் தூத்துக்குடி வரையிலான காலக்கெடுவுக்குள் பணிகளை முடிக்க வேண்டும் என்ற இலக்கின் காரணமாக இருந்ததால் இந்த 1ம் பிரதிவாதியால் வழக்கை தொடர முடியவில்லை என்றும், எனவே 20.11.2020ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாக்கல் செய்து மனுதாரர் கூறிய சங்கதிகள் ஏற்புடையதாக இந்நீதிமன்றம் கருதுவதாலும், அசல் வழக்கில் இருதரப்பிலும் விசாரணை செய்து சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் மூலம்தான் அசல் வழக்கினை முழுமையாக தீர்வு செய்ய முடியும் என்பதாலும், மனுவின் சமநிலையும், முகாந்தாரம் மனுதாரருக்கு ஆதரவாக உள்ளதாலும், இம்மனுவினை நிபந்தனையின் மூலம் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலஅவகாச இடைவெளியை ஈடு செய்ய மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2,000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ஈடாக செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இறுதியாக இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2,000/–யை செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் அழைக்க 25.08.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 22.08.2023 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VENKATESAN

Digitally signed by N VENKATESAN
Date: 2023.08.22 14:29:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

N VENKATESAN Digitally signed by N VENKATESAN Date: 2023.08.22 14:29:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், கடலாடி.
சீரான/வரைவு உத்தரவு
IA.No.135/2022
in
OS.No.190/2019
நாள். 22.08.2023